**நாள் 08.06.2023.**
**OS 36/2020 வா.சா1 சாட்சி அசோக்குமார் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கு கடன் தொகை சம்பந்தமாக பிரதிவாதிக்கு எதிராக நான் தாக்கல் செய்திருந்த 4 காசோலை வழக்குகளையும் என்னுடைய தரப்பு சாட்சியம் முடிந்தபிறகு வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்றும் அதனால் காசோலை வழக்குகள் தள்ளுபடி ஆனது என்றும் சொன்னால் சரிதான். அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் உத்தரவு சான்றின் நகல் என்னிடம் காட்டப்படுகிறது. நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்ற சுருக்கு வழக்கு எண் 229/2019 ன் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **பிசாஆ 5**. சுருக்கு வழக்கு எண் 230/2019 ன் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **பிசாஆ 6.** சுருக்கு வழக்கு எண் 231/2019 ன் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **பிசாஆ 7.** சுருக்கு வழக்கு எண் 232/2019 ன் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **பிசாஆ 8.** காசோலை வழக்கை நடத்தினால் இந்த வழக்கின் கடன்தொகை பற்றிய உண்மை விபரம் தெரிந்துவிடும் என்பதற்காக அந்த வழக்குகளை நான் வாபஸ் பெற்றேன் என்றால் என் வழக்கறிஞர் சிவில் கேஸ் நடக்கும்போது கிரிமினல் கேஸ் வேண்டாம் என்று வாபஸ் பெற அறிவுறுத்தினார்.

அவ்வாறு தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.